6334

எண்.38359/இஎஸ்.2/2014

காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர்
சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்
அலுவலகம், சென்னை-8.நாள்.30.03.2022

22 APR 2022

பொருள்- சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை திரு.ம.ரகுராம், என்பவர் கருணை அடிப்படையில் புழல்-2, மத்திய சிறையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – அரசால் பணி வரன்முறை செய்யப்பட்டது – தொடர்பாக

பார்வை-
1 இவ்வலுவலகச் செயல்முறை ஆணை எண்.42117/இஎஸ்.2/2008, நாள்.22.05.2020.
2 புழல்-2, மத்திய சிறை கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை எண்.3083/பொ1/2019, நாள்.05.06.2020.
3 இவ்வலுவலக கடித எண்.38359/இஎஸ்.2/2014, நாள்.24.06.2020.
4 அரசாணை (3ப) எண்.24, உள் (சிறை.2) துறை, நாள்.28.03.2022.

******

பார்வை 1ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி திரு.ம.ரகுராம், என்பவர் தற்காலிக இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் புழல்-2, மத்திய சிறையில் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 2ல் காணும் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணையின்படி 05.06.2020 முற்பகல் தற்காலிக இளநிலை உதவியாளராக புழல்-2, மத்திய சிறையில் பணியமர்த்தப்பட்டார். மேற்கண்ட பணியாளரின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக, பார்வை 3ல் காணும் இவ்வலுவலகக் கடிதம் மூலம் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது. இந்நேர்வு தொடர்பாக பார்வை 4ல் காணும் அரசாணையின்படி 05.06.2020 முற்பகல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இதனை அன்னாரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யும் பொருட்டும் அன்னாருக்கு சார்பு செய்யும் பொருட்டும் பார்வை 4ல் காணும் அரசு ஆணை அசல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

நா.ஸ்ரீதர்
காவல்துறை இயக்குநர் /
சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்
தலைமை இயக்குநருக்காக

பெறுநர்.
கண்காணிப்பாளர், மத்திய சிறை-2, புழல்.(இணைப்புடன்)
திரு.ம.ரகுராம், இளநிலை உதவியாளர், மத்திய சிறை-2, புழல்.
(கண்காணிப்பாளர், மத்திய சிறை-2, புழல் மூலமாக)
நகல் - இஎஸ்.1, உதவியாளர், தலைமை அலுவலகம் (நடப்பு எண்ணில்)
நகல் – இஎஸ்– பிரிவு கண்காணிப்பாளர்

ஆணைப்படி / அனுப்பப்படுகிறது

கண்காணிப்பாளர்
21/04/2022

20/4/22

20/4/2022

22 APR 2022

<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் - சிறைத்துறை - தமிழ்நாடு அமை[illegible] பணி - கருணையடிப்படை பணிநியமனம் – திரு.ம.ரகுராம், த/பெ. திரு.எஸ்.மணிகண்டன் (லேட்) இரண்டாம் நிலைக் காவலர், பார்ஸ்டல் பள்ளி, பரமத்தி – சிறைத்துறையில் தற்காலிக இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து - ஆணையிடப்படுகிறது.

---

<u>உள் (சிறை-2) துறை</u>

அரசாணை (3ப) எண். 24

நாள்: 28.03.2022
பிலவ வருடம், பங்குனி - 14,
திருவள்ளுவர் ஆண்டு-2053

<u>படிக்கப்பட்டது:-</u>

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள், அவர்களின் கடித எண்.38359/இ.எஸ்.2/2014, நாள் 24.06.2020.

*****

<u>ஆணை:-</u>

திரு. எஸ். மணிகண்டன், என்பவர் சேலம், மத்திய சிறை கட்டுப்பாட்டிலுள்ள பரமத்தி, பார்ஸ்டல் பள்ளியில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த நிலையில் 21.05.2005 அன்று மரணமடைந்தார். அவரது மகன் திரு.ம. ரகுராம் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி கோரி விண்ணப்பித்திருந்தார். அன்னார் 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார், அவருடைய பிறந்த தேதி 02.10.1989. கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கான நிபந்தனைகளை நிறைவு செய்துள்ளதால் அவரது விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு,

தற்காலிக இளநிலை உதவியாளராக சிறைத்துறையில் 05.06.2020 முற்பகல் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். அன்னாரின் பணியினை அவர் பணி நியமனம் செய்யப்பட்ட நாளான 05.06.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்ய காவல் துறை இயக்குநர் / தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் அவர்கள் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

2. திரு.ம. ரகுராம், த/பெ.திரு.எஸ். மணிகண்டன், இரண்டாம் நிலைக் காவலர், பரமத்தி, பார்ஸ்டல் பள்ளி என்பவர் கருணையடிப்படையில் பணிகோரி விண்ணப்பித்த நாளில் 18 வயதை பூர்த்தி செய்யவில்லை. கருணையடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுவதற்கு இறந்த அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர் பணி வாய்ப்புக் கோரி விண்ணப்பிக்கும்போது 18 வயது நிறைவடைந்திருக்க வேண்டும் என்பதோடு 3 ஆண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும். இந்நேர்வில், சிறைத்துறையில், கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.ம. ரகுராம், என்பவர் கருணையடிப்படையில் பணி கோரி 3 ஆண்டுகளுக்குள் விண்ணப்பித்துள்ளார். தனியர் விண்ணப்பித்த நாளில் 18 வயதினை நிறைவு செய்யாததால், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 20(6)(b)-க்கு முரணானது. எனவே, மேற்கூறிய சட்டப்பிரிவு தளர்வு செய்யப்படவேண்டும். மேலும், தனியர் பணி கோரி விண்ணப்பித்த நாளில் 18 வயதினை நிறைவு செய்யாததால், அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1) துறை, நாள் 23.01.2020-க்கு விலக்களிக்கப்பட வேண்டும்.

3. மேற்காணும் சூழ்நிலையில், பரமத்தி, பார்ஸ்டல் பள்ளியில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணிபுரிந்து பணியிடை மரணமடைந்த திரு.எஸ்.மணிகண்டன், என்பவரின் மகன் திரு.ம.ரகுராம் என்பவர் சிறைத்துறையில், கருணையடிப்படையில் 05.06.2020 முற்பகல் முதல் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அன்னாரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்ய ஏதுவாக, இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரர் பணி வழங்க கோரி விண்ணப்பிக்கும் போது 18 வயது நிறைவடையாததால், தனியர் சார்பாக அரசாணை (நிலை) எண்.18 , தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020-க்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 58-யின் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி,

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 20(6)(b) (குறுமவயது பொருட்டு) மற்றும் 28(2) (பணி நியமன நாள் முதல் பணப்பலன்கள் பெற) ஆகியவற்றை அன்னார் சார்பாக தளர்வு செய்து, அன்னாரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் 05.06.2020 முற்பகல் முதல் பணி வரன்முறைப்படுத்த அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.4591/க்யூ1/2022, நாள் 14.03.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.9458/ஜி2/2022, நாள்22.03.2022 - ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
காவல் துறை இயக்குநர்/ தலைமை இயக்குநர்,
சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள், சென்னை-8.
திரு.மரகுராம், இளநிலை உதவியாளர்,
பரமத்தி பார்ஸ்டல் பள்ளி, மத்திய சிறை சேலம்.
(காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர்,
சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் மூலமாக),
முதன்மை மாநில கணக்காயர், சென்னை -18.
மாவட்ட கருவூல அலுவலர், சேலம்.

<u>நகல்:</u>
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை,
சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

5/4/2022
பிரிவு அலுவலர்
5/4/2022